# காலை முரசு

பக்கங்கள்:-16

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | தை 25 | வியாழக்கிழமை | 06.02.2025 | அதிர்வு 188


## தமிழ் மக்கள் தாய் மொழியில் சேவையைப் பெற நடவடிக்கை

### அநுர அரசு அறிவிப்பு

"தமிழ் மக்கள் அவர்களது தாய் மொழியில் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை கவலைக்குரியதாகும். எனவே, தமிழ் மொழி பேசுவோர் அதிகளவில் வாழும் பிரதேசங்களில்

06

# ஊடகப் படுகொலை, தாக்குதல் சூத்திரதாரிகள் தயவு தாட்சண்யமின்றி தண்டிக்கப்பட வேண்டும்

### யாழ். ஊடக அமையம் வலியுறுத்து

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைத் தீவு முழுவதும் கடந்த காலங்களில் கட்டவிழ்த்து விடப்பட்ட ஊடகப் படுகொலைகள் மற்றும் தாக்குதல் சூத்திரதாரிகள் தயவு தாட்சண்யமின்றி சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்று யாழ். ஊடக அமையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

06

# புதிய அரசமைப்பு இப்போது இல்லை

## பொருளாதாரத்துக்கே முன்னுரிமை என்று அமைச்சரவைப் பேச்சாளர் நேற்று தெரிவிப்பு

"புதிய அரசமைப்புப் பணிகளை விட பொருளாதாரச்சவால்களைஎதிர்கொள்வதற்கானவேலைத் திட்டங்களுக்கே அரசு முன்னுரிமையளித்துள்ளது. அந்தவகையில் தற்போது புதிய அரசமைப்பைக் கொண்டுவரப் போவதில்லை."

- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

06



# அர்ச்சுனாவை மனநல வைத்தியரிடம் அனுப்புங்கள்

### நாடாளுமன்றில் சபாநாயகரிடம் தயாசிறி கோரிக்கை




"யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கு உளவியல் பிரச்சினை உள்ளது. ஆகவே, அவரை மனநல மருத்துவரிடம் அனுப்புங்கள்."

– இவ்வாறு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை சிறப்புரிமை மீறல் பிரச்சினை முன்வைத்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா, குறிப்பிட்ட ஒருசில விடயங்களைச் சுட்டிக்காட்டி ஒழுங்குப்

07




இலங்கையில் விரைவில் குடிசனக் கணக்கெடுப்பு – மக்களுக்கு அல்ல. மக்களுக்கு முந்தியமாக்களுக்கு. அதாவது குரங்குகளுக்கு.

நாட்டில் முதல் தடவையாக குரங்குகள் கணக்கெடுப்பு நடைபெறப் போகின்றது. காடுகள் முழுவதும், மரங்கள், கிளைகள், கொப்புகளைத் தேடி எவ்வாறு சரியான கணக்கெடுப்பை மேற்கொள்வார்கள் என்பது தெரியவில்லை. விஞ்ஞான ரீதியான திட்டம் – வழி முறை – ஏதும் அதற்கு இருக்கக்கூடும்.

தோட்டக் கைத்தொழில் அமைச்சு, சுற்றாடல் அமைச்சு, விவசாய அமைச்சு ஆகியவை உட்பட பல அமைச்சுகளை பொலிஸ் திணைக்களத்துடன் சேர்ந்து இந்தக் கணக்கெடுப்பை முன்னெடுக்குமாறு அரசு உத்தரவு வழங்கியிருக்கிறது.

நாட்டில் தேங்காய்த் தட்டுப்பாடு உச்சம். தேங்காய்த் தட்டுப்பாட்டுக்கு தென்னந்தோட்டங்களில் குரங்குகள் நடத்தும் அட்டகாசமும் பிரதான காரணம் என்று ஒரு கருத்துக்

06



# 77 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு கிரிக்கெட் போட்டி

(பா.சதீசன்)

இலங்கையின் 77 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு முள்ளியவளையில் றைற்றன் ஸ்போட்சினரால் மென்பந்து கிரிக்கெட் போட்டி ஒன்று நேற்று முன் தினம் இடம்பெற்றிருந்தது.

அணிக்கு 11 பேர் கொண்ட 6 பந்து பரிமாற்றங்களை கொண்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியானது முள்ளியவளை வித்யா விளையாட்டு கழக மைதானத் தில் இடம்பெற்றது. இந்த போட்டியில் 10 அணிகள் போட்டியிட்டிருந்தன.

இந்த நிகழ்வில், முல்லைத்தீவு பொலிஸ் பொறுப்பதிகாரி சி.ஐ. அமர சிங்க, முள்ளியவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அமரதுங்க, மற்றும் பொலிஸார், விளையாட்டு வீரர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.





# சுதந்திர தினத்தில் குருதிக் கொடை

(பா.சதீசன்)

77 ஆவது சுதந்திர தினத்தை சிறப் பிக்கும் முகமாக முல்லைத்தீவு மாஞ் சோலை வைத்தியசாலை இரத்த வங்கி யினால் குருதிக்கொடை முகாம் ஒன்று நேற்று முன்தினம் நடத்தப்பட்டது.

அனைத்து மத தலைவர்கள் மத்தி யில் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்ப மாகிய நிகழ்வில், குருதிக்கொடையின் தட்டுப்பாடு தொடர்பிலும் அதன் தேவை தொடர்பிலும் வைத்தியரால் கருத் துக்கள் தெரிவிக்கப்பட்டு குருதிக்கொடை ஆரம்பிக்கப்பட்டது.



இந்த குருதிக்கொடை முகாமில் இராணுவத்தினர், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு முல்லைத் தீவு மாவட்ட வைத்தியசாலை இரத்த வங்கியின் பொறுப்பதிகாரி வைத்தியர் சசினி விஜயரத்ன தலைமையிலான வைத்தியர்களிடம் இரத்தத்தை வழங்கி யிருந்தனர்.







# செயற்கை நுண்ணறிவு தொடர்பாக இஸ்தான்புல்லில் நடைபெற்ற உலகளாவிய கருத்தரங்கில் சாணக்கியன்

கடந்த வாரத்தில் துருக்கியின் இஸ்தான்புல்லில் நடைபெற்ற செயற்கை நுண்ணறிவு (AI ) சம்பந்தமான ஓர் உலகளாவிய கருத்தரங்கில் பங்குபற்றியிருந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் அது பற்றிய குறிப்பு ஒன்றை வெளியிட்டிருக்கின்றார்.

அதில் அவர் கூறியுள்ளவை வருமாறு:-

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் என்பது கணினிகள் மற்றும் மென்பொருள்கள் மனிதர்களைப் போல சிந்திக்க, முடிவுகள் எடுக்க, பிரச்சினைகளை தீர்க்க, மற்றும் கற்றுக்கொள்ள உதவும் தொழில்நுட்பம் ஆகும்.

இந்தச் செயலமர்வில் முக்கியமாக மூன்று விடயங்கள் கருத்தில் கொள்ளப்பட்டன.

அதில் முதலாவது விடயம் – தேர்தல் காலங்களிலும் தேர்தல்களின் போதும் AI இனது சாதக, பாதக தாக்கங்கள் பற்றியும் மற்றும் AI இனைப் பயன்படுத்தி எவ்வாறு நாம் கட்சியினது தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்ளலாம் என்பது பற்றியும், எமக்கு எதிரான யுஐ மூலமான பிரசாரங்களை எவ்வாறு கையாளலாம் என்பது பற்றியுமாக இருந்தது.

இரண்டாவது விடயம் – நாடாளுமன்றம் தொடர்பான நீண்ட மற்றும் குறுகிய உரைகள் மற்றும் அதனை எவ்வாறு சுருக்கமாக முக்கிய கருத்துக்களை மாத்திரம் சுருக்கி எடுப்பது என்பது தொடர்பாகவும், அரசியல் சாசனம் மற்றும் எமக்கான வரி அதிகரிப்பது சம்பந்தமான விடயங்கள் மற்றும் அதனுடன் கூடிய ஆராய்ச்சி சம்பந்தமான விடயங்களை எவ்வாறு AI தொழில்நுட்பத்தொ பயன்படுத்தி கையாளலாம் என்பது தொடர்பாக அமைந்தது.

மூன்றாவது விடயம் – AI இனைப் பயன்படுத்தி எவ்வாறு எமது கட்சி கொள்கைகளை மற்றும் நடவடிக்கைகளை அனைவரிடமும் கொண்டு சேர்க்கலாம் என்பது பற்றியும், மற்றும் உறுப்பினர் தொடர்பான தகவல்களை வினைத்திறனாக எவ்வாறு ஓர் தகவல் திரட்டாக கையாளலாம் என்பது தொடர்பாகவும் அமைந்தது.

தொடர்ந்து ஓர் கிழமையாக நடைபெற்ற இக்கருத்தரங்கின் முதல் சில நாள்கள் Cyber Security, கணிணி மூலம் நடக்கும் குற்றங்கள் மற்றும் பாதுகாப்புத் தொடர்பானவையாக அமைந்திருந்தது. இதன்போது பல நாடுகளை சேர்ந்த அரச Cyber Security யுடன் தொடர்புடைய பலர் கலந்து கொண்டிருந்தார்கள். வழங்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய அவர்களின் பாதுகாப்பு கருதி அந்நாள்களில் கருத்தரங்குப் படங்களை வெளியிட முடியவில்லை.

அதிகாரப் பகிர்வு மூலம் கிடைக்கப்பெறும் தமிழருக்கான அதிகாரங்களை வைத்துக்கொண்டு நாம் எவ்வாறு எமது வட கிழக்கினை இந்தப் புதிய யுஐ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மக்களுக்கான சேவைகளை எவ்வாறு வினைத்திறனாக வழங்கலாம் என்பது போன்ற செயல் திட்டங்களுக்கு இவ்வாறான செயலமர்வு மிகவும் அத்தியாவசிய ஒன்றாக காணப்படுகின்றது.

– என்று சாணக்கியன் தமது செய்திக் குறிப்பில் தெரிவித்திருக்கின்றார்.














# யாழ்.போதனா வைத்தியசாலைக்கு 14 நவீன கட்டில்கள் அன்பளிப்பு

யாழ். போதனா வைத்தியசாலை மகப்பேற்று விடுதிக்கு சிவபூமி அறக்கட்டளையினால் நேற்று 14 நவீன கட்டில்கள் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டன.

சிவபூமி அறக்கட்டளைத்தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகனால் வைத்தியசாலை நிர்வாகத்திடம் இந்த கட்டில்கள் வழங்கி வைக்கப்பட்டன.








# யாழ். வட்டு இந்துக் கல்லூரியில் மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்

யாழ். வட்டு இந்துக் கல்லூரியிலிருந்து தேசிய ரீதியில் Little Agriculturist Program (இளம் விவசாய விஞ்ஞானி) gold medal வென்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வு வட்டு இந்துவின் முதல்வர் லங்கா பிரதீபன் தலைமையில் கல்லூரியின் சோமசுந்தரப் புலவர் அரங்கில் சிறப்பாக இடம்பெற்றது.

இதில் கல்லூரியின் பழைய மாணவரும் ரட்ணம் பவுண்டேஷன் ஸ்தாபகருமான கலாநிதி ரட்ணம் நித்தியானந்தன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

அத்துடன், விவசாய போதனாசிரியர் ரமேஷ், ஆசிரிய ஆலோசகர் அருந்தவம், வடமராட்சி களக்கற்கை நிலைய முகாமையாளர் கோகுலராஜன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டு தேசிய ரீதியில் சாதனை படைத்த மாணவர்களை கௌரவித்தனர்.











## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூறப்படுகிறது.

எதிர்காலத்தில் தேங்காய் உற்பத்தி தொடர்பான திட்டங்களை சரிவர வகுப்பதற்கு குரங்குகளின் பெருக்கம் பற்றிய புள்ளி விவரங்கள் முக்கியமானவை என்று கருதப்படுகின்றது. அந்தப் பின்புலத்திலேயே குரங்குகள் கணக்கெடுப்பு இப்போது முன்னெடுக்கப்படவிருக்கிறது.

மந்திகள் கணக்கெடுப்பு என்றதும் 'கோட்டே சிறி ஜெயவர்த்தனபுரவில் தியவன்ன ஓயா ஏரியின் மத்தியில் உள்ள கட்டடத்திலும் வாலில்லா மந்திகள் சில இருக்கின்றன, கணக்கெடுப்பில் அவற்றைத் தவற விடாதீர்கள்!' என்கிறார் என் நண்பர் ஒருவர்.

\+ \+ \+

நாட்டில் முதல் தடவையாக திரவக் கொக்கையின் கொண்டுவரப்பட்டிருக்கின்றமை கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது.

லண்டனில் இருந்து சக்தி பானம் என்ற பெயரில் அனுப்பப்பட்ட 500 மில்லி லிட்டர் பானத்தை இலங்கை சுங்கப் பிரிவினர் கைப்பற்றி இருக்கிறார்கள். அதன் பெறுமதி ஒரு கோடி 30 லட்சம் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

லண்டனிலிருந்து கொழும்பு கிரிபத்கொடவில் உள்ள ஒருவருக்கு அனுப்பப்பட்ட பொருள்கள் அடங்கிய பொதியில் பிற திரவக் குடிபானங்கள், சொக்லேட் ஆகியவற்றுக்கு மத்தியில் இந்த சக்தி பானங்களும், 65 கிராம் குஷ் போதை பொருளும் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

திரவக் கொக்கையின் என்பது ஒரு சக்தி வாய்ந்த – ஆபத்தான – மிக மோசமான – போதைப் பொருளாகும். அது ஒரு மில்லில் லிட்டர் 25 ஆயிரம் ரூபா வரை பெறுமதி உடையது.

இந்தப் போதைப் பொருள் வாய் வழியாக உள்ளெடுக்கப்படலாம். அல்லது ஊசி மூலம் உடலினுள் செலுத்தப்படலாம். அல்லது ஆவியாக முகரப்படலாம் எனக் கூறப்படுகிறது.

ஆய்வுகளின்படி இந்தக் கொக்கையின் திரவ வடிவமானது இரத்த ஓட்டத்தில் உறிஞ்சப்பட்டு மத்திய நரம்பு மண்டலத்தை விரைவாகப் பாதிக்கும் ஒரு சக்தி வாய்ந்த தூண்டியாகும்.

மேலும் அதன் வடிவம் மற்றும் எந்தத் திரவத்திலும் கரையும் அதன் திறன் ஆகியவை காரணமாக திரவ கொக்கையின் கடத்தல் பொருள் ஒரு அதி நவீன கடத்தல் நுட்பமாக கடத்தக்காரர்களால் பயன்படுத்தப்படுகின்றது எனக் கூறப்படுகிறது.

23 வயது உடைய சுற்றுலா வழிகாட்டி ஒருவருக்கே இந்தப் போதைப் பொருள்கள் அடங்கிய பொதி லண்டனில் இருந்து அனுப்பப்பட்டு இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இனி, விற்பனையாகும் திரவ பானங்கள் குறித்தும் அதிகாரிகள் அடிக்கடி 'பாய்ச்சல்' நடத்த வேண்டிய தேவை தவிர்க்க முடியாமல் வரப்போகின்றது....!

---

## தமிழ் மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழ் மொழி அறிவுடைய அரச உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்."

– இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்கிழமை நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"தமிழ் மக்களுக்குப் பெரும்பாலான அரச நிறுவனங்களில் அவர்களது தாய் மொழியில் சேவையைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை காணப்படுவது கவலைக்குரிய விடயமாகும்.

கடந்த காலங்களில் மொழிகள் குறித்த அமைச்சுக்கள் காணப்பட்டன. பல்வேறு பயிற்சிகளும் இடம்பெற்றுள்ளன. ஆனால், அவ்வாறிருந்தும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லை. எவ்வாறிருப்பினும் இது குறித்த புரிதல் எமக்கு இருக்கின்றது.

எனவே, தமிழ் மொழி பேசக்கூடிய மக்கள் வாழும் பிரதேசங்களில் முடிந்த வரை தமிழ் உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு அல்லது சிங்கள உத்தியோகத்தர்களுக்குத் தமிழ் பயிற்றுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

எமது முதலாவது 5 ஆண்டு ஆட்சி காலத்துக்குள் இதற்கான நடவடிக்கையை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம். அரசு என்ற ரீதியிலும் தனிப்பட்ட ரீதியிலும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை அறிந்தவர்கள் என்ற ரீதியில் விரைவில் உரிய தீர்வை வழங்குவோம்." – என்றார்.

---

## ஊடகப் படுகொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"தமிழ் ஊடகவியலாளர்கள் மீது கொலைகளும் வன்முறைகளும் கட்டவிழ்த்து விடப்பட்டபோது திருட்டு மௌனம் காத்திருந்த ஆட்சியாளர்கள் தற்போது லசந்த விக்ரமதுங்கவின் படுகொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் மூவரை விடுதலை செய்வதற்கு சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ள போதும் அதே மௌனத்தைப் பேணப்போகின்றார்களா என்ற கேள்வி எழுகின்றது.

கடந்த நெருக்கடி மிக்க காலப்பகுதிகளில் வடக்கு, கிழக்கில் கொழும்பில் என 39 தமிழ் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டோ – காணாமல் ஆக்கப்பட்டோ உள்ளனர்.

அவர்கள் தொடர்பான அனைத்து வழக்குகளும் முன்னைய காலங்களில் சட்டமா அதிபர்களது ஆலோசனைகளின் பிரகாரம் அவ்வவ் மாவட்ட நீதிமன்றங்களில் கிடப்பில் போடப்பட்டுள்ளன.

ஊடகவியலாளர் மாமனிதர் தராகி சிவராம் முதல் மயில்வாகனம் நிமலராஜன் வரையாகக் கொலைகளை அரங்கேற்றிய கொலைகாரர்கள் சர்வசாதாரணமாக நாட்டை விட்டு வெளியேறவும் திரும்பி வரவும் ஏற்றதொரு சட்ட ஆட்சியே இந்நாள் வரை பேணப்பட்டு வருகின்றது.

சட்டத்தின் முன்னதாக கொலைகாரர்கள் தண்டிக்கபடாத சூழல் வடக்கு, கிழக்கில் மட்டுமன்றி இலங்கை முழுவதும் பின்னராக பரவியிருந்தது.

இந்நிலையில் தற்போது ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை விவகாரத்தில் சாட்சியங்களை அழித்தமை மாற்றியமை தொடர்பில் கைது செய்யப்பட்டு கடந்த ஐந்து மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்ட முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரசன்ன நாணயக்கார, பொலிஸ் பரிசோதகர் திஸ்ஸ சுகந்தபால, இராணுவப் புலனாய்வுப் பிரிவின் சார்ஜன்ட் மேஜர் உதலாகம ஆகியோரை முற்றாக வழக்கிலிருந்து விடுவிக்க சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இத்தகைய அறிக்கையை விடுத்த சட்டமா அதிபர் பதவி விலக வேண்டும், லசந்த விக்கிரமதுங்க படுகொலை சந்தேகநபர்களை விடுதலை செய்வதன் பின்னால் உள்ள காரணங்களை பகிரங்கப்படுத்த வேண்டும்.

ஏனெனில் கடந்த காலங்களில் தமிழ் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்ட போதும் காணாமல் ஆக்கப்பட்ட போதும் புதிய புதிய விளக்கங்களை அதே தரப்புக்கள் முன்வைத்திருந்தன.

இலங்கை தீவு முழுவதும் கடந்த காலங்களில் கட்டவிழ்த்துவிடப்பட்ட ஊடகப் படுகொலைகள் மற்றும் தாக்குதல் சூத்திரதாரிகள் தயவு தாட்சண்யமின்றி சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்று யாழ்.ஊடக அமையம் மீண்டும் வலியுறுத்துகின்றது.

இன, மத வேறுபாடுகளுக்கு அப்பால் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தை வலியுறுத்த அனைவருடனும் கைகோர்க்கும் யாழ். ஊடக அமையம் மீண்டுமொரு முறை சகோதர ஊடகக் கட்டமைப்புக்களுடன் போராடும் தனது நிலைப்பாட்டை மீள உறுதிப்படுத்தியும் கொள்கின்றது." – என்றுள்ளது.

---

## புதிய அரசமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் நேற்றைய ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"புதிய அரசமைப்பைக் கொண்டு வர வேண்டியது அத்தியாவசியமானதாகும். ஆனால், தற்போது அதற்கான பணிகளை ஆரம்பிப்பதற்கு நாம் எதிர்பார்க்கவில்லை.

அரசு நியமிக்கப்பட்டு குறுகிய காலமே கடந்துள்ளது. நாட்டில் ஏனைய விடயங்கள் தொடர்பில் அரசு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து நடைமுறைப்படுத்தி வருகின்றது.

தற்போதுநாம்எதிர்கொண்டுள்ளபாரிய சவால் பொருளாதாரச் சவாலாகும். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான முழு அரசும் அந்தச் சவாலை எதிர்கொள்வதற்கான பணிகளிலேயே ஈடுபட்டுள்ளது.

அதற்கு இன்னும் காலம் செல்லும். இதன்போது ஏற்படக் கூடிய வழமையான பிரச்சினைகள் பல உள்ளன. அவற்றையும் முகாமைத்துவம் செய்து வருகின்றோம்.

பொருளாதாரம் ஓரளவு ஸ்திர நிலைமையை அடைந்ததையடுத்து புதிய அரசமைப்புப் பணிகளை முன்னெடுப்போம். அந்தப் பணிகளையும் நீண்ட நாட்களுக்கு இழுத்துச் செல்ல மாட்டோம்.

குறிப்பிட்ட காலத்துக்குள் மக்களின் கருத்துக்களுக்கு முன்னுரிமையளிப்பதற்கான பொறிமுறையொன்றை ஸ்தாபித்து உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்போம்.

அதற்கமைய நாட்டுக்கும் மக்களுக்கும் மிகவும் பொறுத்தமான அரசமைப்பொன்றை உருவாக்குவதே எமது எதிர்பார்ப்பாகும்.

அனைத்தையும் ஒன்றுடனொன்று பிணைத்துக் கொண்டு அவற்றை வீணடிப்பதற்கு நாம் தயாராக இல்லை. எனினும், பொருளாதார பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்குவதற்கே நாம் முன்னுரிமையளித்துள்ளோம்." – என்றார்.

# சபையில் அர்ச்சுனா நேற்றும் கடும் சீற்றம்

## தான் எங்கு சென்று பேசுவது என்றும் அவர் கேள்விக்கணை



”சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைப்பதற்கு எனக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் மனநிலை பாதிக்கப்பட்ட தயாசிறி ஜயசேகரவும், பிமல் ரத்நாயக்கவும் முரண்பட்டுக் கொண்டார்கள். எனது பிரச்சினை பற்றி பேசப்படவில்லை. நான் எங்கு சென்று பேசுவது?”

– இவ்வாறு யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா சபையில் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தின்போது ஒழுங்குப் பிரச்சினையை முன்வைத்து மேற்கண்டவாறு அவர் கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“எனது சிறப்புரிமை மீறல் பிரச்சினை பற்றி பேசுவதற்காக ஒதுக்கப்பட்ட நேரத்தில் மனநிலை பாதிக்கப்பட்ட தயாசிறி ஜயசேகரவும், பிமல் ரத்நாயக்கவும் முரண்பட்டுக் கொண்டார்கள். எனது சிறப்புரிமை மீறல் பற்றி பேசப்பிடவில்லை.

சிறப்புரிமை மீறலுக்காக எனக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் ஆளும் தரப்பு உறுப்பினரும், எதிர்த் தரப்பின் உறுப்பினரும் முரண்பட்டுக்கொண்டார்கள். எனது பிரச்சினை பற்றி பேசப்படவில்லை. நான் எங்கு சென்று பேசுவது? எனது உரிமை தொடர்ந்து மறுக்கப்படுகின்றது?” – என்றார்.

# ஆசிரியர் இடமாற்ற சபையைக் கூட்டாது இழுத்தடிக்கும் வலயக் கல்விப் பணிப்பாளர்

**(வவுனியா நிருபர்)**

வவுனியா தெற்கு வலய ஆசிரியர்களின் உள்ளக இடமாற்றம் தொடர்பில் இடமாற்ற சபையைக் கூட்டாது வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் இழுத்தடிகின்றார் என்று ஆசிரியர்கள் பலர் குற்றம் சாட்டியுள்ளனர்.

2025 ஆம் ஆண்டுக்கான புதிய கல்வி ஆண்டு ஜனவரி 27 ஆம் திகதி ஆரம்பித்து தற்போது முதலாம் தவணை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. வடக்கின் அனைத்து கல்வி வலயங்களிலும் உள்ளக இடமாற்ற சபைக் கூட்டமானது நிறைவடைத்து ஆசிரியர் இடமாற்ற விவரம் இறுதி செய்யப்பட்டுள்ளது.

ஆனால், வவுனியா தெற்கு வலயத்தில் ஆசிரியர் இடமாற்ற சபைக் கூட்டமானது புதிய வலயக் கல்விப் பணிப்பாளரால் கூட்டப்படாது இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது. இதன் காரணமாக இடமாற்றம் பெற வேண்டிய ஆசிரியர்கள் பலரும் தொடர்ந்தும் தூர இடங்களிலும், கஷ்டப் பிரதேசங்களிலும் பணியாற்ற வேண்டியுள்ளதுடன், மன உளைச்சலுக்கும் உள்ளாகியுள்ளனர் என்று தெரிவித்துள்ளனர்.

# உலக அரசுகள் உச்சி மாநாட்டில் பங்கேற்க ஜனாதிபதி ஐக்கிய அரபு எமிரேட்ஸ் விஜயம்



2025 ஆம் ஆண்டு உலக அரசுகள் உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கு விஜயம் செய்யவுள்ளார் என்று வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு தெரிவித்துள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிபர் முகமது பின் சயீத் அல் நஹ்யானின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி இந்தப் பயணத்தை மேற்கொள்கின்றார் என்று அமைச்சகம் ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இந்தப் பயணத்தின்போது, ஜனாதிபதி “2025 உலக அரசுகள் உச்சி மாநாட்டில்” உரையாற்றவுள்ளார்.

இலங்கைக்கும் ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கும் இடையிலான பரஸ்பர ஆர்வமுள்ள பல துறைகள் குறித்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இரு தரப்பு கலந்துரையாடல்களை நடத்தவுள்ளார் என்றும் வெளியுறவு அமைச்சகம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## அர்ச்சுனாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

பிரச்சினையை முன்வைத்து உரையாற்றியபோதே நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர மேற்கண்டவாறு சபாநாயகரிடம் வலியுறுத்தினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“நாடாளுமன்ற உறுப்பினரான இவரின் (அர்ச்சுனாவை நோக்கி) செயற்பாடுகள் தொடர்பில் எங்களுக்குப் பிரச்சினைகள் உள்ளன. இவர் உங்களை (சபாநாயகரை நோக்கி வெட்கம் என்று தகாத வார்த்தைகளைப் பிரயோகிக்கின்றார்.

அத்துடன் சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிரான விடயம் என்றும் கூறுகின்றார். இங்கே சிங்களம், தமிழ், முஸ்லிம் என்ற வேறுபாடுகள் கிடையாது. இங்கே சிறுபான்மை என்று நாங்கள் எவரையும் கதைப்பதில்லை. பெரும்பான்மை என்று எவரும் செயற்படுவதில்லை.

இவ்வாறான கருத்துக்களுக்கும், செயற்பாடுகளுக்கும் சபையில் இடமளிக்க வேண்டாம். இவருக்கு (அர்ச்சுனாவுக்கு) தலையில் பிரச்சினை உள்ளது. மனநலம் பாதிக்கப்பட்டவர். இவரை மனநல மருத்துவரிடம் அனுப்புங்கள் என்று வலியுறுத்துகின்றேன்.” – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நீதி கிட்டாது!

“கடந்த காலங்களில் இந்த நாட்டில் ஊடகத்துறையின் மீது மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறைச் செயற்பாடுகள் தொடர்பில் முறையான நீதி பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். அதே வேளை ஊடகத்துறையின் சுதந்திரமும், சுயாதீனத் தன்மையும் உறுதிப்படுத்தப்படவேண்டும்.”

- இப்படி வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நாடாளுமன்றில் வலியுறுத்தியுள்ளார்.

இதற்கிடையில் -

‘சண்டே லீடர்’ பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்க படுகொலை மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிரான ஏனைய குற்றச் செயல்களுக்கு நீதி கோரி சுதந்திர ஊடக இயக்கமும் ஏனைய ஊடக நிறுவனங்களும் கறுப்பு ஜனவரியை அனுஷ்டிக்கும் இந்தத் தருணத்தில், லஸந்த கொலை வழக்கில் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் மூவர் விடுதலை செய்யப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டு சட்டமா அதிபர் பரிந்த ரணசிங்க கையொப்பமிட்ட கடிதம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்று சுதந்திர ஊடக இயக்கம் தெரிவித்துள்ளது.

அதாவது இலங்கையில் இருண்ட காலம் எனக் கூறப்படும் யுத்த சமயத்தில் ஊடகவியலாளர்களுக்கு எதிராக அரங்கேறிய கட்டுமட்டுமில்லாத பெருங் கொடூரங்கள் தொடர்பில் நீ-தியை நிலைநாட்டும் எந்த நடவடிக்கையும் இடம்பெறப் போவதில்லை என்பது இந்த செயற்பாட்டின் மூலம் உறுதியாகி இருக்கின்றது.

அக்காலத்தில் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிராக இடம் பெற்ற படுகொலைகள், தாக்குதல்கள், காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள், அச்சுறுத்தல்கள் ஆகியவை தொடர்பில் நீதி நிலைநிறுத்தப்படுவதோ, பொறுப்புக் கூறல் நடைமுறைப் படுத்தப்படுவதோ இடம்பெறப் போவதில்லை என்பது சட்டமா அதிபரின் இப்போதைய முடிவோடு பெரும்பாலும் தெளிவாக உறுதியாகி விட்டது என்று கூறலாம்.

இன விடுதலை கோரி, வாழ்வுரிமைக்கான சுதந்திரம் வேண்டி, ஈழத் தமிழர்கள் நடத்திய ஆயுதம் தாங்கிய போராட்டத்தை ‘பயங்கரவாதம்’ எனச் சித்திரித்த பௌத்த - சிங்கள பேரினவாத மேலாதிக்க ஆட்சிப் பீடம், அந்தப் பயங்கரவாத போராட்டத்தை ‘அரச பயங்கரவாத நடவடிக்கை’ மூலம் அடக்குதல் என்று விநோதமான - விபரீதமான - கொடூரமான - நியாயப்படுத்தல் அணுகுமுறையை முன்னெடுத்தது.

அப்போது அரச இயந்திரத்தினால் ஊடகங்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட கொடூரங்கள் இந்த ‘அரச பயங்கரவாதச் செயற்பாடுகள் தவிர்க்க முடியாதவை’ என்ற தத்துவத்தின் கீழ் நியாயமாகக் காட்டப்பட்டன.

அத்தகைய யுத்த நியாயத்தின் கீழேயே அச்சமயத்தில் ஊடகங்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அரச கொடூரங்களும் நீதியானவை என்று நியாயப்படுத்தும் மறைமுக செயற்பாடுகள் தெற்கில் நடந்தேறின.

அந்த வெளிப்படுத்தப்படாத (அ)நியாயத்தின் கீழ் அப்போது ஊடகங்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அடக்குமுறைகள் அனைத்துமே பொறுப்புக் கூறலுக்கு உட்படுத்தப்படுவதற்கு அவசியமற்றவையாகப் புறமொதுக்கப்பட்டன.

அந்த அரச அடக்குமுறைப் போக்கின் நியாயப்படுத்தலின் கீழ்தான் ஊடகங்களுக்கு எதிரான அந்தக் காலக் கொடூரங்களும் இன்று வரை மூடி மறைக்கப்படுகின்றன. தென்னிலங்கை அரசியல் களநிலையில் குற்றமாகக் கருதப்படாமல் அவை புறமொதுக்கப்பட்டு வருகின்றன.

இந்த அரசியல் பின்புலத்தில் ஊடகங்கள் எதிர்கொண்ட அராஜகங்கள் விடயத்தில் நீதி நிலைநாட்டப்படுவதும் பொறுப்பு கூறல் நடைமுறைப்படுத்தப்படுவதும் என்றுமே சாத்தியமாகப் போவதில்லை. அதுதான் உண்மை.

# சைபர் பாதுகாப்பு சட்டமூலத்தை விரைவாக நிறைவேற்ற நடவடிக்கை

சைபர் பாதுகாப்பு சட்டமூலத்தை விரைவாக நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென இலங்கை கணினி அவசர நடவடிக்கை பிரிவு தெரிவித்துள்ளது.

டிஜிட்டல் பொருளாதாரத்தை நோக்கி நாடு பயணிக்கும் சந்தர்ப்பத்தில் சைபர் பாதுகாப்பு தொடர்பான விதிமுறைகள் கடுமையாக்கப்பட வேண்டுமென அதன் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக தமுனுபொல தெரிவித்துள்ளார்.

இந்த சட்டத்தின் கீழ் சைபர் பாதுகாப்பு அதிகார சபையொன்று உருவாக்கப்படுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.




# இந்துக்களின் சமர் மாபெரும் வருடாந்த கிரிக்கெட் போட்டி 2025: நாளை ஆரம்பம்

இளைஞர்களுக்கு வலுவூட்டவும், மாணவர்களுக்கிடையேயான விளையாட்டுப் பண்பையும் ஆற்றலையும் ஊக்குவிக்கவும் இலங்கையின் புகழ்பெற்ற தமிழ்ப் பாடசாலைகளான இந்துக்கல்லூரி கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிகளுக்கிடையிலான "இந்துக்களின் சமர்" என வர்ணிக்கப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க வருடாந்த கிரிக்கெட் போட்டியானது எதிர்வரும் 2025 நாளை மற்றும் நாளை மறுதினம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பான விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு கொழும்பு தமிழ் யூனியன் விளையாட்டுக்கழகத்தின் பி. சாரா சர்வதேச விளையாட்டரங்க மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இந்துக்களின் பெருஞ்சமரின் பிரதான அனுசரணையாளரான ஜனசக்தி குழுமத்தின் நிறுவனரும் தலைவருமான திரு. சந்திரா ஷாப்டர் மற்றும் குழுமத்தின் தலைமை சந்தைப்படுத்தல் அதிகாரி சாமிக்க டீ சில்வா ஆகியோர் அனுசரணையாளர்களாகவும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சார்பாக பழைய மாணவ சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி வசந்தன், கிரிசாந்த் மற்றும் சுலக்ஷன் ஆகியோரும் இந்துக் கல்லூரி கொழும்பு சார்பாக பழைய மாணவ சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி இளங்கோ ரத்னசபாபதி, அருள்மொழி மற்றும் நவக்குமார், ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த, இந்துக்களின் பெருஞ்சமரின் பிரதான அனுசரணையாளரான ஜனசக்தி குழுமத்தின் நிறுவனரும் தலைவருமான சந்திரா ஷாப்டர்,

"இளைஞர்களை தயார்ப்படுத்துவதிலும், மீட்சியுடனான சமூகங்களை கட்டியெழுப்புவதில் விளையாட்டு முக்கிய பங்காற்றுகின்றது. இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த போட்டித் தொடருடன் தொடர்ச்சியான மூன்றாவது வருடமாக பங்காண்மையை ஏற்படுத்தியுள்ளதையிட்டு நாம் பெருமை கொள்கின்றோம். இலங்கையின் இளைஞர்களுக்கு வலுவூட்டல் மற்றும் இலங்கையின் உயர்வான கலாசார பாரம்பரியங்களை பேணுதல் போன்ற எமது நோக்களுடன் இந்த அனுசரணை சிறந்த வகையில் பொருந்துவதாக அமைந்துள்ளது. JXG இந்துக்களின் சமர்" போட்டியிலூடாக திறமையை கட்டியெழுப்பும் பண்பாளர்களை கட்டியெழுப்பும் மற்றும் சமூக பிணைப்புகளை வலிமைப்படுத்தும் கட்டமைப்புகளை ஏற்படுத்த நாம் எதிர்பார்க்கின்றோம்." என்றார்.

மேலும், இவ்வூடக சந்திப்பில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சார்பாகவும் இந்துக் கல்லூரி கொழும்பு சார்பாகவும், கல்லூரிகளின் பழைய மாணவர்சங்கத்தினரால்கருத்துக்கள்பரிமாறப்பட்டன.

இந்நிகழ்வின் இறுதியில் பிரதான அனுசரணையாளரான ஜனசக்தி குழுமத்தினால் அனுசரணைக்கான காசோலையும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# இந்தியாவிலிருந்து கடல் வழியில் கொண்டு வரப்பட்ட விலங்குகள், மருந்துகளுடன் மூவர் மன்னாரில் கைது



(மன்னார் நிருபர்
எஸ்.ஆர்.லெம்பேட்)

சட்ட விரோதமான முறையில் இந்தியாவில் இருந்து படகு மூலம் தலைமன்னார் பகுதிக்குக் கொண்டு வரப்பட்ட ஒரு தொகுதி பறவைகள்,விலங்குகள் மற்றும் மருந்து பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. மூன்று சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்படையினரும் பொலிஸாரும் இணைந்து மன்னார், பேசாலை பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையில், சட்ட விரோதமான முறையில் நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட புறாக்கள், ஆப்பிரிக்க லவ் பேர்ட்ஸ், பறக்கும் அணில்கள் மற்றும் மருந்து தொகைகளுடன் பயணித்த லொறி ஒன்றுடன், மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

தலைமன்னார் கடற்படையினருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம், மன்னார் பிரதேச பொலிஸ் குற்றப் பிரிவு இணைந்து மேற்கொண்ட இந்த விசேட தேடுதல் நடவடிக்கையின் போது, மன்னார் பேசாலை பகுதியில் சந்தேகத்திற்கிடமான வகையில் வீதியில் பயணித்த லொறி ஒன்று சோதனையிடப்பட்டது.

இதன் போது குறித்த லொறியில் 220 புறாக்கள், 20 லவ் பேர்ட்ஸ்கள், 08 பறக்கும் அணில்கள் மற்றும் 30 மருந்து மாத்திரைகள், மருந்துத் திரவங்கள் அடங்கிய 40 போத்தல்கள், லொறி ஆகியவை கைப்பற்றப்பட்டன. சந்தேக நபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் தம்புள்ளை மற்றும் கொழும்பில் வசிக்கும் 25 மற்றும் 44 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட விலங்குகள், லொறி மற்றும் சான்றுப் பொருள்களுடன் சந்தேக நபர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.



# நெல்லுக்கான நிர்ணய விலை

நெல்லுக்கான புதிய நிர்ணய விலைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதற்கிணங்க, ஒரு கிலோ கிராம் நாட்டரிசி நெல் 120 ரூபா, ஒரு கிலோ கிராம் சம்பா நெல் 125 ரூபா. ஒரு கிலோகிராம் கீரி சம்பா நெல் 132 ரூபா விற்கும் கொள்வனவு செய்யப்படவுள்ளதாக அமைச்சர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

இன்று முதல் கொள்வனவு செய்யப்படுமென அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# ஊழியர் சேமலாப நிதிய சட்டத்தின் கீழ் அங்கத்தவர் பதிவில் புதிய நடைமுறை

ஊழியர் சேமலாப நிதிய சட்டத்தின் கீழ் அங்கத்தவர்களைப் பதிவு செய்யும் புதிய நடைமுறையொன்று தொழில் திணைக்களத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், ஊழியரொருவர் சேவையில் இணைக்கப்பட்டு 30 நாள்களுக்குள் ஊழியர் சேமலாப நிதியத்தில் பதிவு செய்யப்படுவது கட்டாயமாகும் என தொழில் ஆணையாளர் நாயகம் எச்.கே.கே.ஏ. ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இதற்காக 0112 201 201 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு திகதி மற்றும் நேரத்தை ஒதுக்கிக் கொள்ளுமாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.



# அறுபது கிலோ கஞ்சாவுடன் பூநகரியில் இருவர் கைது!

(த.சுபேசன்)

பூநகரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாடியடி பிரதேசத்தில் நேற்றுப் புதன்கிழமை காலை 60 கிலோ 850 கிராம் கஞ்சாவுடன் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பூநகரிப் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆசிறி தலைமையிலான குழுவினர் மேற்படி கைதுநடவடிக்கையைமுன்னெடுத்திருந்தனர்.

பட்டா வாகனத்தில் கஞ்சாவை 28பார்சல்களாக கட்டி எடுத்துச் சென்ற வேளையே மேற்படி கைது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைதான சந்தேக நபர்களை இன்று வியாழக்கிழமை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# 100 சூரிய மின்னுற்பத்தி திட்டங்களை விரைவாக செயற்படுத்த நடவடிக்கை

பல்வேறு காரணங்களால் தடைப்பட்டுள்ள 100 சூரிய மின்னுற்பத்தி திட்டங்களை விரைவாக செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு தேசிய மின் கட்டமைப்பில் 500 மெகாவாட் திறனை இணைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் குமார ஜெயக்கொடி தெரிவித்தார்.

இவற்றில் 10 மெகாவாட் வரையிலான சூரிய மின்சக்தி திட்டங்களும் உள்ளடங்குகின்றன.

இந்த திட்டங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான ஆவணங்களில் காணப்படும் குறைபாடுகள் உள்ளிட்ட பல காரணங்களினால் அந்தத் திட்டங்களைச் செயற்படுத்த முடியாது போயுள்ளதாக அமைச்சர் கூறினார்.

4,000 மெகாவாட் திறன் கொண்ட 49 சூரிய மின் திட்டங்களுக்கு அனுமதி வழங்குவது குறித்து தற்போது ஆராயப்பட்டு வருவதாக அமைச்சு தெரிவித்துள்ளது. இதற்காக குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

சூரிய மின்சக்தி திட்டங்களிலிருந்து ஓர் அலகு மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கான விலை தொடர்பாக இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளத் திட்டமிட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

## பருத்தித்துறை வாள்வெட்டுச் சம்பவம்:

# எஞ்சிய நான்கு சந்தேகநபர்களும் பொலிஸில் நேற்று சரணடைவு!

யாழ். பருத்தித்துறையில் இடம் பெற்ற வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த எஞ்சிய 4 சந்தேகநபர்களும் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தனர்.

கடந்த ஜனவரி 15 ஆம் திகதி பிற்பகல் பருத்தித்துறை – கொட்டடிப் பகுதியில் இந்த வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றிருந்தது. இதன்போது தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள் இருவர் படுகாயமடைந்திருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் 8 சந்தேகநபர்களில் ஏற்கனவே மூவர் பருத்தித்துறை பொலிஸில் சரணடைந்த நிலையில் அவர்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் அவரும் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் எஞ்சிய நால்வரும் நேற்று புதன்கிழமை பருத்தித்துறை பொலிஸில் சரணடைந்துள்ளனர். அவர்கள் இன்று வியாழக்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.



# வவுனியா சாரணர்களின் விழிப்புணர்வுப் பேரணி!

**(கி.வசந்தன்)**

இலங்கையின் 77 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு வவுனியா மாவட்ட சாரணர்கள் “க்ளீன் சிறிலங்கா“ என்ற தொனிப்பொருளில் விழிப்புணர்வுப் பேரணி ஒன்றில் ஈடுபட்டனர்.

வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கத்தில் இருந்து வவுனியா புதிய பஸ் நிலையம் வரை இவ் விழிப்புணர்வு பேரணி இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட சாரண ஆணையாளர் யோ.கஜேந்திரன் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வவுனியா பொலிஸ் நிலையத்தின் சமுதாய பொலிஸ் பொறுப்பதிகாரி, உதவி மாவட்ட ஆணையாளர்கள், பாடசாலை சாரணர் தலைவர்கள், பொறுப்பாசிரியர்கள், திரி சாரணர்கள், சாரணர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.














# கும்பமேளா மரணங்களை பா.ஜ.க. மறைத்துவிட்டது

## தி.மு.க. குற்றச்சாட்டு



கும்பமேளாவில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 48 பேர் உயிரிழந்துள்ளனர் என கூறப்படும் நிலையில், பா.ஜ.க அரசு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை தொடர்பாக தவறான கணக்கைக் காட்டியுள்ளதாக தி.மு.கவின் அதிகாரப்பூர்வ பத்திரிகையான 'முரசொலி' கடுமையாக குற்றம் சாட்டியுள்ளது.

உத்தரப் பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் மகா கும்பமேளா நடைபெற்று வருகிறது. ஜனவரி 13 ஆம் திகதி தொடங்கிய இந்நிகழ்வு பெப்ரவரி 26 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதில் கங்கை, யமுனை மற்றும் சரஸ்வதி (புராண நதி) ஆகிய 3 புனித நதிகள் சங்கமிக்கும் 'திரிவேணி சங்கமத்தில் பக்தர்கள் புனித நீராடி வழிபட்டு வருகின்றனர்.

மௌனி அமாவாசை நாளான ஜன.29 ஆம் திகதி திரிவேணி சங்கமத்தில் லட்சக்கணக்கானோர் புனித நீராடகுவிந்தனர். இதன் விளைவாக ஏற்பட்ட கூட்ட நெரிசலில், 30 பேர் உயிரிழந்தனர் என முதல்வர் யோகி தலைமையிலான அரசு உறுதிப்படுத்தியது.

இந்த நிலையில், கும்பமேளா கூட்ட நெரிசலில் 48 பேர் இறந்துள்ள நிலையில், மரணங்களைக் கூட மறைத்து தவறான கணக்கைக் காட்டிய உத்தரப்பிரதேச அரசை மத்தியில் ஆளும் பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க அரசு பாதுகாக்கிறது என தமிழகத்தில் ஆளும் தி.மு.க.வின் அதிகாரப்பூர்வ பத்திரிகையான 'முரசொலி' கடுமையாக குற்றம் சாட்டியுள்ளது.

பா.ஜ.கவுக்கு உண்மையான பக்தி இருந்திருக்குமானால், அந்த நிகழ்வில் பங்கேற்கும் பக்தர்களுக்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லை. கோவிலுக்கு வெளியேயும் அரசியலை மட்டுமே தங்கள் பக்தியைக் காட்டியிருக்கிறார்கள். பா.ஜ.கவும் அதனைச் சேர்ந்தவர்களும். அதனால்தான் அலட்சியமாக கும்பமேளா நடத்தி மக்களின் உயிரை பலியெடுத்து இருக்கிறார்கள் என்று தி.மு.க. குற்றம் சாட்டியுள்ளது.

# டில்லியில் வாக்குப்பதிவு நிறைவு; 5 மணிக்கு 57.70 சதவீத வாக்கு பதிவு



70 தொகுதிகளைக் கொண்ட டில்லி சட்டசபையின் தற்போதைய பதவிக்காலம் எதிர்வரும் 23ஆம்திகதியுடன்நிறைவுபெறுகிறது.

மொத்தம் உள்ள 70 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக தேர்தல் இடம்பெற்றது. 70 தொகுதிகளிலும் மொத்தம் 699 பேர் போட்டியிட்டனர்.

இதில் ஆம் ஆத்மி, பா.ஜ.க. மற்றும் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுக்கு இடையே மும்முனை போட்டி நிலவியது.

டில்லி சட்டசபைக்கான வாக்குப்பதிவுநேற்றுகாலைதொடங்கியது. பொதுமக்கள் அனைவரும் ஆர்வமுடன் தங்கள் வாக்குகளை செலுத்தி வந்தனர்.

ஜனாதிபதி திரவுபதி முர்மு, மத்திய அமைச்சர் ஜெய்சங்கர், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார், முன்னாள் முதல்-மந்திரி கெஜ்ரிவால், முதல்-மந்திரி அதிஷி, முன்னாள்துணை முதல்-மந்திரி மணிஷ் சிசோடியா ஆகியோர் தங்கள் வாக்குகளை பதிவு செய்தனர்.

டில்லி சட்டசபை தேர்தலில் காலை 9 மணி நிலவரப்படி 8.10 சதவீதம் வாக்குகள் பதிவாகியது. காலை 11 மணி நிலவரப்படி 19.95 சதவீத வாக்குகள் பதிவானது.

பகல் 1 மணி நிலவரப்படி டில்லியில் 33.31 சதவீத வாக்குகள் பதிவானது. தொடர்ந்து, மதியம் 3 மணி நிலவரப்படி 46.55 சதவீத வாக்குகள் பதிவானது.

தேர்தலுக்கான வாக்குப்பதிவு காலை 7 மணிக்கு தொடங்கிய நிலையில் மாலை 6 மணியுடன் நிறைவுபெற்றது.

இதற்கிடையே, இடைத்தேர்தலில் மாலை 5 மணி நிலவரப்படி 57.70 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

# திரிவேணி சங்கமத்தில் புனித நீராடினார் மோடி



மகா கும்பமேளாவை முன்னிட்டு பிரயாக்ராஜ் நகருக்கு வருகை தந்த பிரதமர் நரேந்திர மோடி, மூன்று நதிகள் சங்கமிக்கும் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடினார்.

உத்தரப் பிரதேச மாநிலம், பிரயாக்ராஜில் கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய 3 நதிகள் சங்கமிக்கும் திரிவேணி சங்கமத்தில் கடந்த ஜனவரி 13 ஆம் திகதி முதல் மகா கும்பமேளா நிகழ்ச்சி கோலாகலமாக நடைபெற்று வருகிறது. 144 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் மகா கும்பமேளாவில் கலந்து கொள்ள இந்தியா மட்டுமல்லாமல் உலகம் முழுவதும் இருந்து ஏராளமான பக்தர்கள் தினமும் வந்து புனித நீராடி வருகின்றனர்.

இதுவரை 38 கோடிக்கும் மேற்பட்ட பக்தர்கள் மகா கும்பமேளாவில் புனித நீராடி உள்ளனர் என உத்தரப்பிரதேச அரசு தெரிவித்துள்ளது. எதிர்வரும் பெப்ரவரி 26 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்த புனித நீராடும் நிகழ்ச்சியில் சுமார் 45 கோடி பக்தர்கள் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், பிரதமர் நரேந்திர மோடி, திரிவேணி சங்கமத்தில் நேற்று புனித நீராடினார். ருத்ராக்ஷ மாலை அணிந்திருந்த பிரதமர் மோடி, அதைக் கொண்டு மந்திரங்களை ஜபித்தார். பின்னர், நீருக்குள் மூழ்கி எழுந்தார். மேலும், சூரியன் மற்றும் கங்கை நதியிடம் பிரார்த்தனை செய்தார். அவருடன் முதல்வர் யோகி ஆதித்யநாத்தும் இருந்தார்.

# ஆயிரக்கணக்கான பணியாளர்களை விடுமுறையில் அனுப்பும் அமெரிக்கா

சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க நிறுவனத்தின் ஆயிரக்கணக்கான பணியாளர்கள் நாளை வெள்ளிக்கிழமை இரவு முதல் விடுமுறையில் அனுப்பப்படும் தீர்மானத்தில் மாற்றமில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க நிறுவனம் விடுத்துள்ள புதுப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அத்தியாவசியமான செயற்பாடுகள், தலைமைத்துவ மற்றும் விசேட திட்டங்கள் தவிர்ந்து ஏனைய அனைத்து நேரடி பணியாளர்களும்




இந்த வார இறுதியில் விடுமுறையில் அனுப்பப்படவுள்ளனர்.

டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்றதைத் தொடர்ந்து அரசாங்க நிதியுதவி திட்டங்கள் நிறுத்தப்பட்டன. இதனையடுத்து சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க நிறுவனம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

இந்த நிறுவனத்தை மூடுவதற்கான தீர்மானம் உலகளாவிய ரீதியில் உள்ள மனிதாபிமான உதவித் திட்டங்களில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என பலர் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், அமெரிக்காவிற்கு வெளியே பணியமர்த்தப்பட்ட பல பணியாளர்கள் நாடு திரும்புவதற்கான நடவடிக்கைகளை வெளிவிவகார அமைச்சுடன் இணைந்து முன்னெடுத்து வருவதாக சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க நிறுவனம் தெரிவித்துள்ளது.

# போரினால் பாதிக்கப்பட்ட காசா அமெரிக்காவின் கட்டுப்பாட்டில்

## டொனால்ட் ட்ரம்ப் அறிவித்தார்





போரினால் பாதிக்கப்பட்ட காசா பகுதியை அமெரிக்கா தனது கட்டுப்பாட்டில் எடுக்கும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்தார்.

அமெரிக்காவிற்கு தற்போது விஜயம் செய்துள்ள இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை வெள்ளை மாளிகையில் சந்தித்த பின்னர், இரு நாட்டுத் தலைவர்களும் நடத்திய கூட்டுச் செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற போது அமெரிக்க ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி ட்ரம்ப் இரண்டாவது முறையாகப் பதவியேற்ற பிறகு, இஸ்ரேலியப் பிரதமர் அந்த நாட்டிற்கு வருகை தரும் முதல் அரச தலைவர் ஆவார்.

காசா பகுதிக்கு வெளியே பாலஸ்தீனியர்களை மீள்குடியேற்றம் செய்வ-தற்கான திட்டமும் முன்வைக்கப்பட்டுள்ளது.

வெடிக்காத குண்டுகள் மற்றும் பிற ஆயுதங்களை அகற்றுவதற்கான பொறுப்பையும் அமெரிக்கா ஏற்கும் என்று ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

# இஸ்மாயிலி ஷியா முஸ்லிம் சமூகத்தின் ஆன்மீகத் தலைவர் ஆகா கான் மறைவு

இஸ்மாயிலி ஷியா முஸ்லிம் சமூகத்தின் ஆன்மீகத் தலைவரும், தொழிலதிபருமான ஆகா கான், லிஸ்பனில் 88 வயதில் காலமானார்.

இவர் 1935 டிசம்பர் 13 ஆம் திகதி ஜெனீவாவில் பிறந்தார்.

அவரது தாத்தா சர் சுல்தான் முகமது ஷா ஆகா கான் 1957 இல் இறந்த போது, அவர் தனது 20 வயதில் ஷியா முஸ்லிமின் ஒரு பிரிவான இஸ்லாமிய முஸ்லிம்களின் இமாமாக ஆனார்.

மறைந்த தொழிலதிபர் ஆகா கான் பிரிட்டிஷ், பிரெஞ்சு, சுவிஸ் மற்றும்



போர்த்துகேய குடியுரிமையைக் கொண்டிருந்தார்.

ஆகா கானின் தொண்டு நிறுவனங்கள் நூற்றுக்கணக்கான மருத்துவமனைகள், கல்வி மற்றும் கலாச்சார திட்டங்களை நடத்தி வருகின்றன.

டெல்லியில் உள்ள ஹுமாயூனின் கல்லறை தளத்தை மீட்டெடுப்பதில் ஆகா கான் கலாச்சாரத்திற்கான அறக்கட்டளை முக்கியமானது.

ஆண்டுதோறும் கட்டிடக்கலைக்கான ஆகா கான் விருது உள்ளது.

மேலும் அவர் கிழக்கு மற்றும் மத்திய ஆபிரிக்காவில் மிகப் பெரிய சுயாதீன ஊடக அமைப்பாக மாறியுள்ள நேஷன் மீடியா குழுமத்தை நிறுவினார்.

# இன்றைய ராசி பலன்கள் - 06.02.2025

## மேஷம்

இன்று பாதுகாப்பின்மை உணர்வு நிரம்பி காணப்படும். எனவே எந்த விஷயத்தையும் நீங்கள் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

பணியிடத்தில் அதிக பொறுப்புகள் காணப்படும். பணியில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இது உங்கள் ஆர்வத்தை மேம்படுத்த உதவும்.

நீங்கள் உங்கள் உறவில் உள்ள பிரச்சினையை தீர்ப்பதில் மும்மரமாக இருப்பீர்கள். உங்கள் துணையிடம் இது பற்றி பேசுவீர்கள்.

இன்று பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்பு குறைவு. உங்கள் செலவுகளை கண்காணிக்கவும்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

## ரிஷபம்

இன்று நீங்கள் மகிழ்ச்சியாகவும் உற்சாகமாகவும் காணப்படுவீர்கள்.பணிகளை எளிதாக முடிப்பீர்கள். உங்களின் நட்பு பட்டியலில் கூடுதல் நண்பர்கள் இடம் பெறுவார்கள்.

உங்கள் பணியில் முன்னேற்றம் காண்பீர்கள். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள்.

உங்கள் தொடர்பாடல் திறன் உங்கள் துணையை மகிழ்விக்கும். உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை மேம்படுத்துவீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். ஊக்கத் தொகை வகையில் இன்று உங்களுக்கு பண வரவு காணப்படும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## மிதுனம்

இன்று சிறப்பாக வளர்ச்சி காண்பீர்கள். உங்கள் திறமைகளை நிரூபிக்கும் வாய்ப்பு கிடைக்கும். உங்கள் அணுகுமுறையில் நம்பிக்கை காணப்படும்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் திறமையை பயன்படுத்தி நன்மை அடைவீர்கள் மற்றும் இலக்குகளை குறித்த நேரத்தில் அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் சிறப்பாக நேரத்தை செலவிடுவீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு சென்று மகிழும் வாய்ப்பு உள்ளது.

சிறு கடன் வகையில் இன்று பண வரவு ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள போதிய அளவு பணம் காணப்படும்.

இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியம் மற்றும் திடகாத்திரம் பராமரிப்பீர்கள்.

## கடகம்

உங்கள் முயற்சிகளில் வெற்றி காண போராட வேண்டும். தியானம் அல்லது யோகா பயில்வதன் மூலம் பதட்டத்தை சமாளிக்கலாம்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும்.பதட்டத்தை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் தவறு காண்பீர்கள்.இதனால் விரோதம் விளையும். இதனை சமாளிக்க முயல வேண்டும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. உங்கள் நிதிநிலையை சமாளிக்க நீங்கள் கண்டிப்பான திட்டம் மேற்கொள்ள வேண்டும்.

சளி மற்றும் தலை வலி காரணமாக உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படும்.

## சிம்மம்

எதிர்மறை எண்ணங்கள் உங்கள் நம்பிக்கையை குலைக்கும். நீங்கள் நம்பிக்கை உணர்வை மேற்கொள்ள வேண்டும்.

மந்தமான சூழ்நிலை காணப்படும். உங்கள் செயல்திறன் மூலம் இந்த நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக்கொள்ளலாம்.

உங்கள் துணையின் நடத்தை உங்களை உணர்ச்சிவசப்பட வைக்கும். இது குடும்ப சூழ்நிலையின் மகிழ்ச்சியை குறைக்கும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். அது மகிழ்ச்சிகரமாக இருக்கது. உங்கள் செலவுகளை கண்காணிக்க வேண்டும். நிதிநிலையில் ஏற்றத்தாழ்வுகளை சந்திப்பீர்கள்.

பதற்றமும் பேரார்வமும் ஆரோக்கியத்துக்கு உகந்ததல்ல. இத்தகைய உணர்வுகளை சமாளியுங்கள்.

## கன்னி

நீங்கள் விரைந்து பணிகளை முடிப்பீர்கள். உங்கள் தன்னம்பிகையை வளர்த்துக் கொள்வீர்கள்.

உங்கள் பணியில் அங்கீகாரம் கிடைக்கப்பெறுவீர்கள். அதிக வாய்ப்புகள் கிடைக்கப் பெறுவீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று உறவுமுறையில் உற்சாகம் காணப்படும். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று மகிழ்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சுமூகமாக இருக்கும். இன்று அதிக பண வரவு காணும் நிலையில் இருப்பீர்கள்.

ஆரோக்கியத்தில் எந்த விதமான பெரிய பிரச்சினையும் இருக்காது.

## துலாம்

உங்கள் செயல்களை கண்காணிக்க வேண்டும். உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் போராட வேண்டும். சூழ்நிலையை பொறுமையுடனும் உறுதியுடனும் எதிர்கொள்ள வேண்டும்.

சக பணியாளர்களுடன் பயணம் மேற்கொள்வீர்கள். உங்கள் கீழ் பணி புரிபவர்களிடம் கவனமாக இருங்கள்.

உங்கள் துணையுடன் சூடான விவாதம் நடத்த வாய்ப்புள்ளது. உங்கள் இருவரிடமும் நல்ல புரிந்துணர்வு இல்லாததே இதற்குக் காரணம்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. நீங்கள் அதிகம் செலவு செய்வீர்கள். இதனால் பணப் பிரச்சினை உருவாகும்.

பதற்றம் காரணமாக தலை வலி ஏற்படும். தியானம் மூலம் ஆறுதல் பெறலாம்.

## விருச்சிகம்

இன்றைய நாள் உங்களுக்கு உகந்த நாளாக இருக்காது.இன்றைய நாள் சுமூகமாக இருக்க நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பணியிடத்தில் கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க வேண்டியிருக்கும். உங்கள் பணிகளை திறமையான முறையில் ஆற்ற நீங்கள் தயாராக இருக்க வேண்டும்.

அகந்தைப் போக்கு காரணமாக உறவில் இணக்கமின்மை காணப்படும்.எனவே இத்தகைய உணர்வை தவிர்த்தல் நல்லது.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது.

தலைவலி மற்றும் முதுகுவலியால் நீங்கள் பாதிக்கப்படலாம். எனவே ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தியானம் மேற்கொள்வது நல்லது.

# இன்றைய ராசி பலன்கள் - 06.02.2025




இன்று சிந்தனை மிகுந்த நாளாக இருக்கும். எனவே உங்கள் இலக்குகளை திட்டமிட்டு மேற்கொள்வது நல்லது.

இன்று பணியிடத்தில் மிதமான பலன்களே கிடைக்கும்.நீங்கள் பணியில் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும். இத்தகைய உணர்வை தவிர்த்தல் நல்லது.

நிதி வளர்ச்சி சுமூகமாக இருக்காது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள இன்று பணப்பற்றாக்குறை காணப்படும்.

நீங்கள் தலை வலியால் பாதிக்கப்படலாம். ஓய்விற்கு நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்.




உங்கள் சமயோசித புத்தி மற்றும் புத்திசாலித்தனம் மூலம் நீங்கள் நன்மை அடைவீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். உங்கள் முயற்சிக்கு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் அன்பாக உறவாடுவீர்கள். இருவரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள கணிசமான தொகை உங்களிடம் காணப்படும். பங்கு வர்த்தகம் மூலம் பண வரவு காணப்படும்.

நம்பிக்கையான எண்ணம் மூலம் உங்கள் ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிக்கலாம்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். வளர்ச்சிக்கான வாய்ப்புகள் அதிகமாக காணப்படும். சுய முயற்சி மூலம் உங்கள் கடின உழைப்பிற்கு பலன் பெறுவீர்கள்.

பணியில் பதவி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் கடின உழைப்புக்குப் பாராட்டு கிடைக்கும்.

காதலர்களிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். இதனால் இருவரும் உறவில் கடந்த கால வேறுபாடுகளை மறந்து உறவை புதுப்பிக்கலாம்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் விருப்பங்களை எளிதில் அடைவதற்கு இது சாதகமான நாள். கடினமான சூழ்நிலையை எதிர் கொள்ளும் தைரியம் உங்களிடம் காணப்படும்.

பணியில் நற்பெயர் எடுப்பதற்கான சாத்தியம் உள்ளது. உங்கள் திறமைகளை உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள். இதனால் உங்கள் தன்னம்பிக்கை நிலை உயரும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொள்வீர்கள். இதனால் உறவில் அமைதியும் மகிழ்ச்சியும் பராமரிக்க இயலும்.

இன்று நிதி நிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் பொறுப்புகளை நிறைவேற்றுவீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது.




# நீர் கட்டணத்தை குறைக்க நடவடிக்கை; நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை தகவல்

நீர் கட்டணத்தை விரைவில் குறைக்கவுள்ளதாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

மின் கட்டணம் 20 வீதத்தால் குறைக்கப்பட்டமைக்கு அமைய, நீர் கட்டண குறைப்பு வீதம் தொடர்பில் விடயங்களை ஆராய்வதற்காக குழு நியமிக்கப்பட்டுள்ளதாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை குறிப்பிட்டுள்ளது.

மேற்படி அறிக்கை தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் தலைவருக்கு நாளை வெள்ளிக்கிழமை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அதன்பின்னர் அந்த அறிக்கை விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது.

அதற்கமைய, அடுத்த மாதத்திற்குள் நீர் கட்டண குறைப்பு வீதம் தொடர்பில் அறிவிக்கப்படுமென தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.